Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 67 என் தேவனாகிய கர்த்தாவே, ... என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் எல்லாருக்கும் என்னை விலக்கி இரட்சியும் சங்.7:1 மேய் 2021 No.5

இயேசு கிறிஸ்துவே அவரது சொந்த கிரியையின் சாரம்

Jesus Christ himself - The Essence of His own work

Charles H. Spurgeon

இயேசு கிறிஸ்துவே சுவிசேஷத்தின் முதுகெலும்பும் சாரமாகவுமிருக்கிறார். சுவிசேஷம் அறிக்கப்பட்டபோது, அப்போஸ்தலன் அதைக்குறித்து, 'கிறிஸ்து பிரசங்கிக்கப்படுகிறார்' பிலி.1:18 என்று குறிப்பிடுகிறார். ஏனெனில் சுவிசேஷம் கிறிஸ்துவே. இயேசு எதைக் கற்பித்தார் என்று அறிய வேண்டுமானால் அவரை அறிய வேண்டும். தேவனுடைய சத்தியத்தின் அவதாரமாக அவர் வந்தார். அவர் மூலமாகவும் அவரிலும் அது வெளிப்படுத்தப்பட்டது. அவரே, 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்' யோவா.14:6 என்று கூறியிருக்கிறார். அவரை அறிந்து கொள்ளுவதற்காக வகைவகையான புத்தகங்களைப் படிக்க வேண்டிய தில்லை அல்லது அகராதிகள் மூலம் நல்ல போதகரின் வார்த்தைகளுக்கு விளக்கம் தெரிந்து கொள்ள வேண்டியதுமில்லை. திரும்பி அவரது முகத்தை மாத்திரம் பார்த்தால் போதும். அவரது செயல்களைப் பாருங்கள். அவரது ஆவியைக் குறித்துக் கொள்ளுங்கள். அப்போது அவரது போதனைகளை அறிந்து கொள்ளுவீர்கள். அவர் போதித்ததை வாழ்ந்து காட்டினார். அவரது காயங்களை சிந்தித்து பாருங்கள். அப்போது அவரது உள்ளான தத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

இயேசுக் கிறிஸ்துவே அவர் தாம் செய்த கிரியைகளின் சாரமாயிருக்கிறார். எனவே நாம் அதிகமாக அவரை நம்புவது அவசியம். அவரே இரட்சிப்பின் ஒரே காரணர். அப்போஸ்தலன் இதைக் குறித்து, "..... என்னில் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவகுமாரன் ...." கலா.2:20 என்கிறார். அவர் தமது கிரீடம், சிங்காசனம், பரலோக சந்தோஷங்கள் ஆகிய வற்றை மட்டுமல்ல, தம்மையே நமக்காகக் கொடுத்துவிட்டார். பூமியில் வாழும் நிலையில் அனைத்து சொகுசுகளையும் உதறித்தள்ளிய அவர், தமது ஜீவனையும் அளித்துவிட்டார். அனைத்து வேதனைகளையும் சகித்தார். தனது சரீரம், இருதயம், இரத்தம் அனைத்தையும் கொடுத்தாரென்பதின் சுருக்கம் எனக்காக அவர் தம்மையே அளித்து விட்டார் என்பது தான். எபே.5:25-ன்படி "..... அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து .... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்". "..... அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்" 1 பேது.2:24. இங்கே பதிலாள் இல்லை. அவரைப் போல பலியாக அவருக்கிணை யாரும் எதுவுமில்லை. இதுவே முற்றுப் புள்ளி. யோபின் துக்கத்தைப் போல அவரது பாடுகளினால் துக்கம் ஏற்பட்டது. 'அவன் மேல் மாத்திரம் உன் கையை நீட்டாதே' யோபு.1:12 என்றும் 'அவன் பிராணனை மாத்திரம் தப்பவிடு' யோபு.2:6 என்றும் சாத்தானிடம் கூறப்பட்டதே.இதுபோல ஆண்டவராகிய இயேசுவுக்குரியவை களெல்லாம் எடுக்கப்பட்டுவிட்டன. 'மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத் தான் இரட்சிக்கத் திராணி இல்லையே' மத்.27:42. ஏனெனில் நமக்காக அவர் தம்மைப் பலியாக அர்ப்பணித்து விட்டார்.

அவர் அப்படிச் செய்தபடியால் மட்டுமே நம்மை இரட்சிக்க முடிந்தது. அவரது ஆளத்துவத்தின் மதிப்பு அவரது பரிகாரத்துக்கு பலன் அளித்தது. அவர் தெய்வீக தன்மையுடையவர். எல்லாவற்றிற்கும் மேலான தேவன். சதா காலத்துக்கும் ஆசீர்வாதமானவர். அவரில் முடிவற்ற நற்குணம் காணப்பட்டது. அவர் மனிதனானாலும் மனிதத்துவத்தில் பரிபூரணராயுமிருந்தார். எனவே கீழ்ப் படியவும் பாடுபடவும் கூடியவராயிருந்தார். மனிதனுக்குப் பதிலாக மரித்தார். அவர் இம்மானுவேல் **(தேவன் நம்மோடிருக்கிறார்)** எனவே நம்மை இரட்சிக்கக் கூடியவர்.

இந்த நிவாரணத்தைப் பார்க்கும் போது இயேசுவே அதின் முக்கிய பகுதியாயிருக்கிறார். அவருடைய தியாகத்தின் பலன் அங்கு வெளிப்பட்டது. எனவேதான் "தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி", என்று எபி.1:3-ல் படிக்கிறோம். அவரது தியாகத்தால் சுத்திகரிப்பு ஏற்பட்டது. ஆனால் அவர் பலியானார் என்பது 7:27-ல் தெளிவாகிறது. அவர் பிரதான ஆசாரியராக பலிபீடத்தின் முன் ஒரு இரத்தபலியைச் செலுத்தினார். அந்த பலி, காளையோ, ஆட்டுக் கடாவோ, காட்டுப்புறாவோ அல்ல, அவரேதான். "அவர் தம்மைத் தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக் காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்" எபி.9:26.

தேவனுக்கு நாம் பிரியமானவர்களாயிருக்க ஒரே காரணம் அவரே. ஏனெனில் அவரே நமது சுகந்த வாசனையான பலி. நமது பாவம் அகற்றப்படுவதற்குக் காரணமானவர் அவர் ஒருவரே. ஏனெனில் அவரே நமது பாவ நிவாரண பலி. இரத்தத்தால் சுத்திகரிப்பதும் தொடர்ந்து தண்ணீரினால் கழுவுதல் ஆகியவை அவரது முக்கியத்துவத்தைக் குறிக்கின்றன.

அவர் வேதவாக்கியங்களில் பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை ஏசா.45:21 என்று சொல்லவில்லையா! 'என் சிலுவையை நோக்கிப் பாருங்கள்', 'என் வாழ்வை நோக்கிப் பாருங்கள்', 'என் மரணத்தைப் பாருங்கள்' அல்லது எனது சாக்கிரமந்துகளையோ, வேலையாட்களையோ நோக்கிப் பார்க்கும்படி சொல்லாமல், 'என்னை நோக்கிப் பாருங்கள்' என்று சொல்லியிருக்கிறார். தமது சொந்த உதடுகள் மூலம், "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" மத்.11:28 என்று அழைப்பு விடுத்திருக்கிறார். உண்மையில் கிறிஸ்தவனின் வாழ்வின் லட்சியமாகிய "விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி ஓடுவதாகும்" எபி.12:2.

ஆண்டவராகிய இயேசுவே நமது விசுவாசத்தின் அடிப்படை. நீங்கள் உங்கள் எளிய பெலவீன விசுவாசத்தை நோக்காமல் இயேசுவையே நோக்குங்கள். உங்களுடைய விசுவாசத்தால் ஏற்பட்ட பலன் திருப்தியற்றது. நீங்கள் உங்கள் கண்களை உங்களை விட்டகற்றி இயேசுவுக்கு நேராக்குங்கள் என்று உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இவற்றைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் எபே.1:17 படியுங்கள். "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டும்". ஆண்டவராகிய இயேசு, நமது இரட்சிப்பின் காரியத்தில் எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருக்கவும் அதன் மூலம் நாம் அவரோடு நல்ல தனி உறவைப் பெற்றுக்கொள்ளவும் தேவன் கிருபை செய்வாராக.

(3-ம் பக்கம் பார்க்க)

முக்கிய அறிவிப்பு

ஒவ்வொரு மாதமும் 10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்
மொபைல் : 95432 21008
வாட்ஸ்ஆப் : 94897 40295

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

அமெரிக்க ஐக்கிய நாட்டில் நடந்த ஒரு சம்பவம். ஒருவன் காரில் சென்று கொண்டிருந்தபோது கார் விபத்தில் சிக்கிவிட்டது. காரிலிருந்த சிறுவனும் விபத்தில் பாதிக்கப்பட்டான்.

மருத்துவரை அழைத்து பரிசோதித்துப் பார்த்தபோது "சிறுவனின் காலை எடுத்துவிட வேண்டும்" என்று திட்டவட்டமாக கூறிவிட்டார்.

சிறுவனுடைய சகோதரர்கள் நண்பர்களை அழைத்து, சிறுவனுடைய படுக்கை அருகில் முழங்காலிட்டு, சிறுவனுக்காக அனை வரும் இரவு முழுவதும் ஜெபித்துக் கொண்டே இருந்தனர்.

விடியற்காலையில் பார்த்தபோது, சிறுவனும் முழங்காலிட்டு தனது சகோதரர்களுடன் சேர்ந்து ஜெபித்துக் கொண்டிருப்பதை மருத்துவர் நேரில் பார்த்தார், திடுக்கிட்டார்.

இச்சிறுவன்தான் பிற்காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாக திகழ்ந்த ஜசன்னோவராவார்.

"கனவிலும் கருதாத காரியங்களும் ஜெபத்தினால் கைகூடும்" என்று டென்னிசன் கூறுகின்றார்.

ஆம்! "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ" என்று வேதம் கூறுகிறது ஆதி.18:14.

வாக்குத்தத்தம்

என் ஜனமே கேள், நான் பேசுவேன்; உன் வீட்டிலிருந்து காளை களையும், உன் தொழுவங்களிலிருந்து ஆட்டுக்கடாக்களையும் நான் வாங்கிக் கொள்வதில்லை.

நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்; பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே.

நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி;

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய் சங்கீதம் 50:7-15.

இரட்சகருக்குள் அன்பான சகோதரனே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2021 மேய் மாத தூதனுக்காக என் தேவனை அதிக நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும் துதிக்கிறேன். முதலாவது, வாசகர் 3 பேருடைய கடிதங்களை அச்சிட்டு, அதற்கான பதிலையும் எல்லா வாசகருக்காகவும் கீழே அச்சிடுகிறேன்.

கடிதம் - 1

கீழ் நட்டிவாக்கம், 18.02.2021

அன்பார்ந்த வருகையின் தூதன் ஆசிரியர் (வெஸ்லி தேவதாசன்) அவர்களுக்கு சகோதரி M. சாரதா சொக்கலிங்கம் எழுதுகிறேன்.

ஐயா, 1970-ம் ஆண்டு அப்போது அப்பாS.தேவதாசன் இருந்தார்கள். என் கணவர், மாமனார், மாமியார் என்னை கொடுமைப்படுத்தினார்கள். அப்போது தேவதாசன் அவர்கள் வருகையின் தூதனை கொடுத்து வாசிக்கச் சொன்னார்கள். அது முதல்கொண்டு இன்று 2021 பெப்ரவரி வரை வாசித்துக் கொண்டு வருகிறேன், ஜெபிக்கிறேன்.

இதுவரை வாசிக்கின்ற வருகையின் தூதனை நிறுத்தாதீர்கள். 500 ரூ காணிக்கை அனுப்புகிறேன். பெற்றுக் கொண்டு எனக்காகவும் என் கணவருக்காகவும் (**என் வயது 72**) பிள்ளைகளுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

தங்கள் சகோதரி M. சாரதா

1970-லிருந்து 2021 பிப்ரவரி வரை சுமார் 50 வருடமாக வருகையின் தூதன் எனக்கு கிடைப்பதற்காக ஸ்தோத்திரம்.

*****

அன்பு சகோதரியே, உங்கள் கடிதத்திற்கு நன்றி. நீங்கள் இரண்டு பக்கம் எழுதின கடிதத்தை சற்று சுருக்கமாக அச்சிட்டிருக்கிறேன்.

2017-ம் ஆண்டிலிருந்து 2020-ம் ஆண்டு வரை அடியேன் எழுதினதையே ஜெராக்ஸ் எடுத்து திரும்பவும் அச்சிடுகிறேன்.

I ஜனவரி 2018: 2017-ம் ஆண்டுடன் தபால் சலுகைக்கான லைசன்ஸ் முடிவடைகிறது. அடுத்த ஆண்டு சலுகை கிடைக்குமா என்று தெரியவில்லை. தபால் சலுகை கிடைத்தால் அனைவருக்கும் அனுப்புவோம், தபால் சலுகை கிடைக்காவிட்டால், தபால்தலை (stamp) ஒட்டி தேவையான வர்களுக்கு மட்டும் அனுப்புவோம்.

நமக்கு தபால் சலுகை கிடைக்கவில்லை. ஆயினும் **இந்நாள் வரைக்கும்** அனைவருக்கும் தேவ தயவால் தூதனை அனுப்பி வருகிறோம். அதே வேளை நம்மைப் போல் தபால் சலுகையை இழந்த அநேகரில், இரண்டு பத்திரிகைகளை பற்றி, **தூதன் வாசகர் புரிந்து கொள்வதற்காக** கீழே எழுது கிறேன்.

1. தூத்துக்குடி மாவட்டம் முதலூரில் இருந்து '**எழுப்புதல்**' என்ற பெயரில் ஒரு பத்திரிகை வெளிவருகிறது. நான் அதனை விரும்பி படிப்பேன். திடீரென்று எனக்கு பத்திரிகை வரவில்லை. விசாரித்தபொழுது அவர் கூறினதை ஏற்கெனவே தூதனில் எழுதியிருந்தேன். "மாதந்தோறும் ஊழியங்களை தாங்குவோருக்கு மாத்திரம் மாதந்தோறும் பத்திரிகை அனுப்புகிறோம், மற்றவர்களுக்கு சுழற்சி முறையில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்திற்கு அனுப்பு கிறோம்". அதன்படி கடந்த 2020-ம் ஆண்டு அடியேனுக்கு வந்தது இரண்டே இரண்டு மாத பத்திரிகை மாத்திரமே.

2. எனது ஆவிக்குரிய நண்பர், ஜெபவீரர், குமரி மாவட்டத் தைச் சேர்ந்தவர், அவருடைய பத்திரிகையும் எனக்கு வரவில்லை. முகவரிகளை குறைத்திருப்பார்கள் என எண்ணுகிறேன். நான் தொலைபேசி வழியாக கேட்ட போது மறுபடியும் அனுப்பி வருகிறார்கள். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாத்திரம் பத்திரிகை வெளியிடும் அவர், **நவம்பர்-டிசம்பர்** மாத பத்திரிகையின் ஆசிரியர் கடிதத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்:

"தவிர்க்க முடியாத சில சூழ்நிலைகளினால் சென்ற **செப்டம்பர்-அக்டோபர்** மாதப் பத்திரிகையினை வெளியிட முடியவில்லை. தயைகூர்ந்து மன்னியுங்கள். இனிமேல் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உருவாகாதிருக்க ஜெபித்துக் கொள்ளுங்கள். பல நேரங்களிலும் இத்தனை சிரமங்களின் மத்தியிலும் பத்திரிகை ஊழியம் தேவையா என்கின்ற கேள்வி எனக்குள்ளே உருவாகிறது".

*****

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, சூழ்நிலைகள் இவ்வாறு இருக்க தூதன் மாத்திரம் மாதந் தோறும் உங்கள் வீடு தேடி வருவது ஆச்சரியமல்லவா! இரண்டு காரணங்களை கீழே எழுதுகிறேன் :

(6-ம் பக்கம் பார்க்க)

- **கடிதங்கள், மணியாடர்கள்** அனுப்ப வேண்டிய முகவரி:
  வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
  VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
  Mobile: 95432 21008, 9489740295, **e-mail:**varukayinthoothan@hotmail.com
- **காசோலை** *(Cheque & Draft)*
  வெஸ்லி தேவதாசன் என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி அன்பாய் கேட்கிறேன்.
- **வங்கி** வழியாய் காணிக்கை அனுப்புவோர் **(Net Banking)** தயவாய் உடனே எங்களுக்கு **SMS** அனுப்புங்கள், அல்லது அலுவலக செல் நம்பர் **95432 21008** வழியாக தெரிவியுங்கள்.

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0000033**

(1-ம் பக்க தொடர்ச்சி)

இயேசு கிறிஸ்துவே சுவிசேஷத்தின் சாராம்சம்

இயேசு கிறிஸ்து சுவிசேஷத்தின் சாராம்சமாயிருப்பதால் அவரைக் குறித்த நெருக்கமான அறிவு நமக்கு வேண்டும். அவர் தமது சீஷருக்குக் கற்பித்த முக்கிய கருப்பொருள் அவர்கள் அவரை அறிந்து கொண்டு அதன் மூலம் பிதாவையும் அறிய வேண்டும் என்பதாகும். எம்மாவூருக்குச் சென்ற இரு சீஷரோடு சம்பாஷிக்கப் பல விஷயங்களிருந்தன. ஆனால் இயேசு ஒரு பழைய பொருளில் அவர்களோடு சம்பாஷித்தார், "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துச் சொன்னார்" லூக்.24:27. வேறு எந்தத் தலையங்கமும் இதில் பாதி முக்கியத்துவமும் பெறாது. எந்த மனிதனும் இதைக் குறித்துப் போதிக்க முடியாது. ஆனால் இத்தெய்வீக நபர் இதை வெளிப்படுத்துவது நலமாயிருந்தது. ஏனெனில் அவரே தேவனுடைய அவதாரமாயிருந்து தேவனுடைய சகல சத்தியங்களின் முக்கியஸ்தராயிருந்தார்.

இதுவும் தூய ஆவியானவரின் பணியே. யோவா.16:14-ன் படி "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்". தூய ஆவியானவர் கிறிஸ்துவை நமக்கும் நம்மிலும் வெளிப்படுத்துவார். ஆண்டவராகிய இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது பேசியவைகளெல்லாம் தூய ஆவியானவர் நமது உள்ளங்களில் திறந்தளித்து புரியச்செய்கிறார். தேற்றரவாளன் போதகராகவும் இயேசுவே போதனையாகவும் இருக்கின்றன.

நீங்கள் எத்தனையோ காரியங்களை அறிவது என் விருப்பமாயிருந்தாலும் அவற்றில் விரும்பப்படத்தக்கது இயேசு ஒருவரே. இது அவருடைய போதனையாகவும், தூய ஆவியானவருடைய போதனையாகவும் வேதபுத்தகத்தின் முழுமையைப் பொருளாகவுமிருக்கிறது. மோசே, ஏசாயா மற்றும் அனைத்துத் தீர்க்கர்களும் அவரைக் குறித்துப் பேசினார்கள், அவரைக் குறித்து எழுதப்பட்டவை அனைத்தும் இயேசுவே கிறிஸ்து என்று விசுவாசிக்கவும் மற்றும் விசுவாசிப்பதின் மூலம் அவர் நாமத்தின் மூலம் ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் முடியும் எனக் காண்பிக்கின்றன. இந்தப் புத்தகம் விலையேறப் பெற்றது. இந்த விலையேறப்பெற்ற தன்மைக்கு காரணம் இயேசு இதின் மூலம் வெளிப்படுத்துவதே. இது விலையுயர்ந்த முத்து அடங்கிய நிலம், பரலோகத்தின் விலையுயர்ந்த ஆபரணம் அடங்கிய பெட்டி. இயேசுவையே அதின் நடு அறையில் நாம் கண்டுகொள்ளும்படி நடத்தப்படாவிட்டால் நாம் பாதை தவறிவிட்டோம். இயேசுவிலேயே நாம் வந்து வாசம் பண்ணும் அனுபவத்தை நாம் பெறாவிடில் நாம் தூய ஆவியானவரைக் குறித்து போதிக்கப்படவில்லை என்பதும், கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றிய போதனையைத் தவறவிட்டுவிட்டோம் என்பதும் பொருளாகும். அவரை அறிவதே நமது ஞானத்தின் ஆரம்பமும் நமது ஞானத்தின் கிரீடமுமாகும். அவரை அறிந்து கொள்ளுவது மனந்திரும்புதலின் முதல் பாடமும், பரலோகத்தை அடையும் போது கடைசி ஆசீர்வாதமாகவுமிருக்கிறது. நமது ஆவல் என்னவெனில் கிறிஸ்துவின் அன்பை அறிவதன் மூலம் அறிவு பெருகும் என்பதாகும். கர்த்தர் தாமே உங்களுக்கு புரிந்து கொள்ளுதலின் கண்களை தருவதால் அவைப் பிரகாசமடைந்து, அவரது அழைப்பின் நம்பிக்கை, பரிசுத்தவான்களில் பெறப்படும் அவரது சுதந்தரத்தின் மகிமை ஆகியவற்றை அருளுவாராக.

இயேசு சுவிசேஷத்தின் முழுமையாக இருப்பதால் நாம் பவுலோடு சேர்ந்து "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக" கலா.6:14 என்று சொல்ல முடியும். "இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருக்கிறேன்" 1 கொரி.2:2. இவ்வாறு முன்பு கூறப்பட்டபடியே இன்று நாமும் சொல்கிறோம். நாம் இவ்வாறு கிறிஸ்துவைப் பிரசங்கிக்கும்போது நமது பிரசங்கம் மேலானதாயிருக்கிறது.

பரிசுத்தவான்களின் வாழ்க்கையைக் குறித்து அனுதினமும் கற்றுக் கொள்வது தேவனுடைய மந்தையை மேய்க்கிறவர்களுக்கு மிகவும் அவசியம். அது இருதயத்தை அசைத்து, மனசாட்சியை விழிப்படையச் செய்து, வாஞ்சைகளைத் திருப்திப்படுத்தி, பயங்களை அமைதிப்படுத்துகிறது. ஆக கிறிஸ்துவையே பிரசங்கிப்போம். அதனால் மக்கள் களைப்படைவதில்லை. ஏனெனில் அவரது வார்த்தைகள் சத்தியமான வைகள். "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்" யோவா.12:32.

இயேசு கிறிஸ்துவே நமது சந்தோஷத்தின் ஆதாரம்

இயேசுக் கிறிஸ்து நமது அனைத்து சந்தோஷங்களுக்கும் ஊற்றும் உறைவிடமுமானவர். இவ்வாறு நாம் பெற்றுக் கொண்டிருக்கும் ஆசீர்வாதமான ஊற்றுக்காக சந்தோஷப்படுவோம். நமது துக்க வேளைகளில் நமக்கு ஆறுதலாயிருப்பவர் இயேசு மட்டுமே. அவர் என் சகோதரராயிருப்பாரானால் எனக்கு எப்பொழுதும் நம்பிக்கையுண்டு. அவர் கீலேயாத்தின் பிசின் தைலத்தை விடச் சிறந்தவர். "அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு நமது துக்கங்களைச் சுமந்தார்" மத்.8:17. "ஆகையால் அவர் தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்" எபி.2:18. வேதனை, பசி, தாகம், தனிமை, நிந்தை, கடும் துயரம் போன்றவற்றை இயேசு சுமந்தார். நம்மைப் போல எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதிருந்தார். அவர் துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதலளிக்கிறார். இரவு தனித்திருந்து பாடுகளோடு காத்திருக்கிற ஜாமக்காரர் அனேகர் அவரை எண்ணி, தங்கள் பெலனை புதுப்பித்திருக்கிறார்கள். தம்மைக் குற்றப்படுத்துகிறவர்களுக்கு முன்பாக துக்கம் அனுபவித்த அவர் காண்பித்த பொறுமை நம்மில் பொறுமையை எழுப்புகிறது. அவர் குடித்த பாத்திரத்தையும் அவர் பெற்ற ஸ்நானத்தையும் யார் மறுக்கக்கூடும்?

"அவரது பாதை எனது பாதையைவிட கரடுமுரடும் அந்தகாரமுமானது. கிறிஸ்துவாகிய என் ஆண்டவர் பாடுபடும் போது நான் முறுமுறுப்பதா!".

கெத்சமனேயின் இருளான அனுபவம் வேதனைப்படும் அநேக ஆத்துமாக்களுக்கு வெளிச்சமாகியுள்ளது. மரண பரியந்தம் அவருடைய பாரம் மரண தருவாயிலிருப்பவர்கள் சந்தோஷமாகப் பாடச் செய்துள்ளது. நமது துக்கங்களில் அவரே நமது ஆத்துமாவுக்கு ஆறுதல். நாம் துன்பமாம் புயலிலிருந்து வெளியேறி ஆழமான சமாதானத்தில் கடந்து வரும்போது அவருடைய நாமத்தைத் துதிப்போம். அவரே நமது சமாதானம். ஆண்டவராகிய இயேசுவை அறியுமுன் இருதயத்தில் ஆழமான சமாதானத்தை நாம் அறிந்ததில்லை. சீஷர்கள் பயத்தால் அறைக்கதவைப் பூட்டிக் கொண்டிருந்த போது இயேசு கூறிய இனிய வார்த்தைகளை லூக்.24:36-ல் படிக்கலாம். "..... இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று, உங்களுக்குச் சமாதானம் என்றார்". ஆண்டவர் இந்த நல்ல செய்தியைக் கொண்டு வந்தார். அவரது பிரசன்னம் சமாதானத்தை நடைமுறைப்படுத்தியது. நாம் அவரைப் பார்க்கும் போது நமது ஆவி இளைப்பாறுதலின் நறுமணத்தை முகருகிறது. வலி நிறைந்த தலை அவரது மடியில் தலையணையின் அனுபவத்தைப் பெறுகிறது.

யோவான் 20:20-ல் "சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்" என்று படிக்கிறோம். விசுவாசத்தால் இயேசு சிங்காசனத்தில் வீற்றிருப்பதைக் கண்டு சந்தோஷத்தால் நிரப்பப்படுகிறோம். ஏனெனில் அவரது மகிமையே நமது திருப்தி. அவர் உயிரோடெழுந்தவர். அவர் உயிரோடெழுந்ததும் இனி மரிக்கவேமாட்டார் என்பதும் எத்தனை சந்தோஷம்! உயிர்த்தெழுதலின் சந்தோஷம் மிகமிக உயர்வானது. சிறைப்படுத்தியதை சிறையாக்க வானத்துக்கு ஏறினார். இப்போது பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். பிதாவின் சகல மகிமையோடும் சத்துருக்களை நொறுக்கிப் போட வருவார். எதிர்பார்த்திருக்கும் சபைக்கு இது மகிழ்ச்சி.

அவரை மகிமையில் காண்பது எத்தனை சிறப்பான அனுபவம். ஒரு வேளை அவர் வருமுன் நாம் மரிக்கலாம். ஆனாலும் பயம் வேண்டாம். "..... நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னோடே இருக்க விரும்புகிறேன்" யோவா.17:24 என்று அவர் நமக்காக விண்ணப்பித்திருக்கிறார்.

அதிசயமான இயேசு

Jesus the wonderful

R.A. Torrey (1856-1928)

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப் பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமான வர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமை யுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு என்னப்படும்" ஏசா.9:6.

ஏசாயா தீர்க்கன் தூய ஆவியால் தூண்டப்பட்டு 740 ஆண்டுகளுக்கப் பால் வரப்போகும் நசரேயனாகிய இயேசுவைக் குறித்துக் கூறிய மேன்மை யான வார்த்தைகளே இவைகள். இவை களுக்குள் நமது ஆண்டவரின் தெய்வீக மகிமை, இணையற்ற குணாதிசயம், அதிசயமான பணிகள் ஆகியவற்றின் பொருள் மிகுதியாக அடங்கியுள்ளது. இவைகளுக்குள் அவர் நாமம் அதிசய மானவர் என்பதைக் குறித்து மட்டும் சிந்திப்போம். வேத புத்தகத்தில் பிதா குமாரன் பரிசுத்த ஆவி ஆகிய தேவனைக் குறிப்பிடும்போது பெயர்களுக்கு அர்த்த முண்டு. பெயர் அந்நபரின் தன்மையை வெளிப்படுத்தும். இயேசு அவரது தன்மையில் அதிசயமானவர், அவரது குணாதிசயத்தில் அதிசயமானவர், அவரது பணியிலும் அதிசயமானவர்.

இயேசு அவரது தன்மையில் அதிசயமானவர். அவர் தெய்வீகமானவர். வேறு எந்த ஒரு நபரையும் தெய்வீக மானவர் என்று நாம் சொல்ல முடியாது. வேதபுத்தகம் இந்த சத்தியத்தை நிராகரிப் பதில்லை மாற்கு.12:6-ல் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்களை வேலையாட் கள் என்று குறிப்பிட்ட பின்பு தன்னைக் குறித்து தேவனுடைய 'நேசகுமாரன்' என்றும் தேவனுடைய 'ஒரே குமாரன்' என்றும் குறிப்பிடுகிறார். யோவான் 10:30-ல் 'நானும் என் பிதாவும் ஒன்றா யிருக்கிறோம்' என்கிறார். யோவான் 14:9-ல் 'என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்' என்றும் யோவா.5:23-ல் "குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்" என்றும் இயேசுவே கூறியிருக்கிறார்.

இயேசுவைக் குறித்து அப்போஸ் தலனாகிய யோவான் "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது; அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்; சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று" யோ.1:1-3 என்று குறிப்பிடுகிறார். தொடர்ந்து "அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம் அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமையாகவே இருந்தது" வச.14 என்று விவரிக்கிறார்.

அப்போஸ்தலனாகிய தோமா இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவருடைய பாதத்தில் விழுந்து, "என் ஆண்டவரே, என் தேவனே", யோ.20:28 என்று கதறினான். கொலோ.2:9-ல் அப்போஸ்தலனாகிய பவுல் ".... தேவத் துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீர பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக் கிறது" என்கிறார். ரோ. 9:5-ல் "..... இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப் பட்ட சகலத்திற்கும் மேலான தேவன்" என்று எழுதுகிறார். பேதுரு அப்போஸ் தலன் "எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து" என்கிறார். எபிரேயர் நிருப ஆக்கியோன் "இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து சகலத் தையும் தம்முடைய வல்லமையுள்ள கரத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டாக்கி, உன்னதத் திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்" எபி.1:3 என்று விவரிக்கிறார். பிலிப்பியருக்கு எழுதும்போது பவுல் அவரைக் குறித்து மனித வடிவாய் வருமுன் அவர் தேவனுடைய ரூபமாயிருந்தார் எனக் குறிப்பிடுகிறார் பிலி.2:6.

வேதபுத்தகம் ஆண்டவராகிய இயேசு தெய்வீகமானவர், அவரிடம் தெய்வீக மகிமை, மகத்துவம், வல்லமை போன்ற தன்மைகள் இருப்பதைக் தெளிவாக்குகிறது. அவர் தேவன். ஆகவே ஏசாயா தனது தரிசனத்தில் அவரது வருகையைக் குறித்து, "அவர் அதிசய மானவர்' என்கிறார். ஆம் அவர் அதிசய மானவர், மிக மிக அதிசயமானவர். நமது எண்ணங்களுக்கு மேலான அதிசய மானவர். எனவேதான் அவர் நாம் மகிழ் வுடன் அவரை ஆராதிக்கவும் தியானிக் கவும், புகழவும் கூடியவராய் சதாகாலங் களுக்குமிருக்கிறார்.

தெய்வீகமான அவர் அதே வேளையில் உண்மை மனிதனுமாயிருக் கிறார். ஆதியிலிருந்த வார்த்தை மாம்ச மாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன். அதே வேளையில் மனித குமா ரனும் கூட."தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தனும் அவரே" 1 தீமோ.2:5. இயேசுவில் பூரண மனிதத்துவமும் பூரண தேவத்துவமும் இணைந்திருந்தன. என் சரீரமும் ஆவியும் எப்படி இணைந் திருக்கின்றன என்று நான் அறியா விட்டாலும் அந்த இணைப்பு உண்மை யானதே. நான் மறுபடியும் பிறந்தபோது, நான் பெற்றுக்கொண்ட தெய்வீகத் தன்மை என்னுடைய இயற்கையான பிறப்பால் காணப்பட்ட சரீர புத்திபூர்வ மான ஒழுக்கநெறிகளோடு இணைந்தது என்பதை நான் அறிய மாட்டேன். எனவே இயேசு பூரணமான மனிதனும் பூரணமான தேவனும் என்பதில் எந்த ஐயமுமில்லை. அவர் நாமம் அதிசய மானவர் என்பதில் எந்தக் குறைபாடு மில்லை.

அவருடைய குணாதிசயத்தில் அவர் அற்புதமானவர்

அவர் தனது குணத்தில் பரி பூரணர். எந்தக் கறைதிரையும் அவரது வாழ்வில் இல்லை. அவரில் காணப்பட்ட நற்குணங்கள் யாவும் பரிபூரணமானவை. அவரது வாழ்வினை அறிய அறிய அவரது குணம் இன்னும் அதிக அதிக பூரணரா யிருப்பதை உணரலாம். பல ஆண்டுகள் அவர் எதிரிகளின் மத்தியில் வாழ்ந்தும் அவர்கள் அவரிடம் எந்தக் குறை யினையும் கண்டுபிடிக்க முடியவில்லை. பல நூற்றாண்டுகளாக மக்களும் அவரில் குறை காண அவர்களால் முடியவில்லை. அவர் அதிசயமானவர். காலாகாலங்களில் அவர் அதிசயமானவராகவே இருக்கிறார். அவர் தனித்தன்மையுடன் உயர்ந்து நிற்கிறார்.

தூய்மையில் அவர் பரிபூரணர்

பேதுரு அவரைக் குறித்து, 'பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்' என்கிறார் அப்.3:14. யோவான் அவரை 'பரிசுத்தர்' 1 யோவா.2:20 என்று குறிப்பிடுகிறார். அசுத்த ஆவிகள் அவரைக் கண்டபோது, "..... உம்மை இன்னார் என்று அறிவேன்; நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்த மிட்டான்" மாற்கு 2:24. பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும் ....." என்று எபி.7:26-ல் படிக்கிறோம். நம்மைப் போல சோதனைகளையும் உபத்திரவங் களையும் கடந்து சென்ற போதும் அவர் பாவம் செய்யவில்லை எபி.4:15. அவரது சரீர பரிசுத்தம்தான் மறுரூபமலையில் அவரது முகம் பிரகாசிக்கவும் ஆடைகள் வெண்மையாய்க் காட்சியளிக்கவும் ஏதுவாயிருந்தன.

அவர் அன்பிலும் பரிபூரணர். அவர் மனிதரிடம் காட்டிய அன்பு பார பட்சமற்றது. நல்லோரையும் பொல்லா தோரையும் அவர் ஒன்றுபோல நேசித் தார். யோவானையும் நாத்தானுவேலை யும் நேசித்த அவர் கதரேயருடைய நாட்டில் வசித்த பொல்லாத ஆவி மனிதனையும், சிலுவைக் கள்வனையும் ஏழு பிசாசுகள் பிடித்திருந்த பெண்ணை

(5-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியரின் மிக மிக முக்கிய அறிவிப்பு :

1. சகோதரி ஹெலன் (A. Helan Nancy), உங்கள் பெயரில் வங்கியில் காணிக்கை வந்துள்ளது. ஆனால் உங்கள் முகவரியை அலுவலகத்தில் கண்டுபிடிக்க இயல வில்லை. எனவே தயவாய் உங்கள் முகவரியை தெரிவியுங்கள், நன்றி.

2. இன்னும் சில தேவனுடைய பிள்ளைகள் வங்கியில் காணிக்கை அனுப்பியிருக் கிறீர்கள், உங்கள் பெயர் கூட காணப்படவில்லை எனவே காணிக்கை அனுப்பின வர்கள் தயவாய் உங்கள் முழு முகவரியை தெரிவியுங்கள், நன்றி

அலுவலகம் - 95432 21008 உதவி - 94897 40295

(4-ம் பக்க தொடர்ச்சி)

யும், விபசாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிக்கப்பட்ட ஸ்திரீயையும் கூட நேசித்தார். தனது பகைஞருக்காகவும் அவர் ஜெபித்தார். சிலுவைப் பாடுகளின் போது அவமானம் வேதனை ஆகிய வற்றை சகித்துக்கொண்டே அவர்களுக் காக ஜெபித்தார். "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்ன தென்று அறியாதிருக்கிறார்களே" லூக்.23:34 என்பது அவரது ஜெபம்.

அன்பின் மிகுதியால் எந்தத் தியாகத்திற்கும் அவர் தயங்கவில்லை. "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" 2கொரி.8:9 மற்றும் பிலி.2:6-8 வசனங்களையும் படியுங்கள். எத்தனை பெரிய அற்புத அன்பு! தேவனுக்குச் சமமானவர். அவை களை வெறுத்து ஏழைத் தச்சருடைய குடும்பத்தில் ஒரு மாட்டுத்தொழுவத்தில் பிறந்தும் மக்கள் அவரை ஏற்றுக் கொள்ள வில்லை. புறக்கணிக்கப்பட்ட மக்களுக் காக கெத்சமனேயில் இரத்த வேர்வை சிந்தினார், சிலுவையில் வதைக்கப்பட் டார். பல்வேறு நிந்தைகளை அனுபவித் தார். எனவேதான் அவரை அதிசயமான வர் என அழைக்கிறார். அவருடைய சாந்தம், தாழ்மை, பொறுமை, தைரியம் போன்ற எல்லாவற்றிலும் அவர் பரிபூரணர்.

அவரது கிரியைகளில் அதிசயமானவர்

முதலாவது, அவர் பாவத்திற்குப் பரிபூரண பரிகாரம் செய்துவிட்டார். "நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ, நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்" ஏசா.53:6. நமது ஒவ்வொரு பாவமும் சிலுவையில் நிவிர்த்தி செய்யப்பட்டுவிட்டது. "மரத் திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப் பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பி ரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்க லாக்கி மீட்டுக்கொண்டார்" கலா.3:13. அவரது மரணம் பரிபூரண நிவிர்த்தியா யிருப்பதால் அவரை விசுவாசித்து அவரது நிவாரணத்தை ஒப்புக்கொண்ட தும் எனது அனைத்து பாவங்களும் அகற்றப்பட்டு அவரில் நான் நீதிமானாக் கப்படுகிறேன்."நாம்அவருக்குள் தேவனு டைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" 2 கொரி.5:21.

இது ஆச்சரியமும் அற்புதமும் தானே! பொய்யன், திருடன், தேவதூஷ ணம் சொல்லுகிறவன், கொலைகாரன், விபசாரி போன்ற அனைவரும் இரத்தாம் பர சிவப்பான பாவங்களோடு அவரிடம் வந்தாலும் கிறிஸ்துவின் மரணம் பூரண நிவாரணமளித்து அவரது நிவாரணத்தை ஏற்றுக் கொள்கிறவர்களை வெண்மை யாக மாற்றிவிடுவார். எனவே அப்பாவங் கள் என் கண்முன் வந்தாலும் நான் சிலுவையை நோக்கிப் பார்க்கிறேன். அப்போது "என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்" என்ற இயேசு வின் கதறுதலைக் கேட்கிறேன் மத்.27:46. அதோடு 'முடிந்தது' யோவா.19:30 என்ற நிறைவு ஒலியும் தொடருகிறது. ரோமச் சேவகன் அவரை விலாவிலே குத்த இரத்தமும் ஜலமும் வெளிப்பட என் பாவமெல்லாம் நிவிர்த்தியாக்கப்பட்டு விட்டதை உணருகிறேன்.

"இயேசு என் அனைத்துக் கடனையும் தீர்த்து விட்டார்

பாவம் சிவப்பான கறையை ஏற்படுத்தினது

அவர் அதைக் கழுகி உறைந்த மழை போல் வெண்மையாக்கிவிட்டார்"

அனைத்துலக பாவமும் மன் னிக்கப்பட்டுவிட்டது. அற்புதம் தானே. கல்வாரி மரணத்தை ஏற்றுக்கொள்வது மட்டுமே நாம் செய்ய வேண்டிய செயல்.

அவர் பாவநிவிர்த்தி செய்த தோடு நம்மைப் பாவத்தின் வல்லமை யிலிருந்தும் விடுவிக்கிறார். அவரை நம்பு கிறவர்களை அவர் பாவத்திலிருந்தும் பாவத்தின் வல்லமையிலிருந்தும் விடுவிக் கிறார். "ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" யோவா.8:36.

பாவத்தின் அடிமைத்தனத்தில் வாழ்ந்த அனேகரை இயேசு விடுவித் திருக்கிறார். அவர்கள் வாழ்க்கை முற்றிலும் மாறிவிட்டது. "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியா யிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின" 2 கொரி.5:17.

ஒரு ஓய்வுநாள் இரவிலே ஒரு மனிதன் ஒரு பட்டணத்தின் தெருக் களில் நின்று வசதி படைத்த மக்களிடம் மிகவும் பரிவோடு அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படி கெஞ்சிக்கொண்டே நின்றான். சில வருடங்களுக்கு முன்னால் அவன் முரடனாகவும் குடிகாரனாகவும் வாழ்ந்தவன், இப்போது அவன் வாழ்வு மாறிவிட்டது. அற்புதமாக அவன் வாழ்வை மாற்றிய ஆண்டவர் கிரியை களில் அற்புதமானவர்.

வரும் நாட்களில் இன்னும் அற் புதமான செயல்களை அவர் செய்யவிருக் கிறார். அவரது குரலால் மரித்தோர் எழுந் திருப்பார்கள். நாமும் அவர்களோடு சேர்ந்து மத்திய ஆகாயத்தில் அவரை சந்திப்போம். அவரது பூரண சாயலை நாம் பெற்றுக் கொள்வோம். அப்போது வேதனை, பெலவீனம் யாவும் அகன்று போகும். அழகிய சாயலைப் பெற்று சுறுசுறுப்புடன் செயல்படுவோம். நம்முடைய மகிமையான சுதந்தரத்தை சுதந்தரவாளிகளாகப் பெறுவோம். தேவனுடைய ஞானம், வல்லமை, தூய்மை யாவற்றிற்கும் பங்காளிகளா வோம். என்ன அதிசயம்!

இயேசு அதிசயமானவர். அவரது தெய்வீக தன்மையால் முடிவில்லாத மகிமையை உடையவர். அவரது இணை யற்ற பரிபூரண குணநலனால் அவர் அதிசயமானவர். அவர் நமது பாவங்களை மன்னித்துவிட சிலுவையில் மரித்தார். அவரது உயிர்த்தெழுதலால் நம்மைப் பரிபூரணப்படுத்தி, தேவபிள்ளைகளாக மாற்றுகிறார். அவரை ஏற்றுக்கொள்கிற வர்களுக்கு ஞானத்தையும் ஆசீர்வாதத் தையும் அருளுகிறார். அவரை ஏற்றுக் கொள்ளாதவர்களின் நிலைபரிதாபமானது.

கிறிஸ்துவில் விசுவாசமும் நம்பிக்கையும்

Faith and hope in Christ

J.C. Ryle (1816-1900)

நாம் கிறிஸ்துவுடன் இன்னும் அதிகமாக நெருங்குவோம். இதயப்பூர்வ மாக அதிகமாய் நேசிப்போம். அவரைப் போல வாழுவோம். தைரியமாக அறிக்கையிடுவோம். இன்னும் அதிகமாக அவரைப் பின்பற்றுவோம். அதற்குரிய பலனைப் பெறுவோம். உலக மக்கள் நகைக்கலாம். பெலவீன சகோதரர்கள் இது அளவுகடந்தது என்று எண்ணலாம். ஆனால் அது நலமானது, மாலைப் பொழுதில் அது வெளிச்சம் தரும். வியாதிப்படுக்கையில் சமாதானம் தரும். வரும் உலகில் வாடாத மகிமையின் கிரீடத்தை நமக்குத் தரும்.

காலம் சமீபம். இவ்வுலகின் வேட்கை கடந்துபோகும். இன்னும் சில புயல்களும் அசைவுகளும் ஏற்பட்ட பின் துறைமுகத்தில் பத்திரமாகக் கரை சேரு வோம். வியாதியில்லாத ஒரு உலகுக்கு நேராகப் பிரயாணம் பண்ணுகிறோம். அங்கு பிரிவு, வேதனை, அழுகை, புலம்பல் யாவும் ஓய்ந்து போகும். "வருகிறவர் இன்னும் கொஞ்ச காலத்தில் வருவார், தாமதம் பண்ணார்" எபி.10:37. அவரது சமூகத்தில் முழுமையான சந்தோஷமுண்டு. தமது ஜனங்களின் கண்களின் கண்ணீரைக் கிறிஸ்து துடைத்துப்போடுவார். பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம். மரணமும் ஒருநாள் அழிக்கப்படும் வெளி.10:14.

இவற்றிற்கிடையில் தேவ குமார னின் விசுவாச வாழ்வில் நிலைத்திருப் போம். நமது பாரங்களை கிறிஸ்துவின் மேல் வைத்து அவர் எப்போதும் வாழு கிறவர் என்ற மகிழ்ச்சியுடன் வாழுவோம்.

தேவனுக்கே ஸ்தோத்திரம். நாம் மரித்தாலும் கிறிஸ்து வாழுகிறார். அன்பானவர்கள் கல்லறையில் வைக்கப் பட்டாலும் அவர் ஜீவிக்கிறார். அவர் மரணத்தை அழித்தார். சுவிசேஷத்தின் மூலம் ஜீவனையும் சாவாமையையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார். மரணமே உன் வாதைகள் எங்கே? பாதாளமே உன் சங்காரம் எங்கே? என்று சவால் விட்டவர் உயிரோடிருக்கிறார். நமது தீய உடலை மாற்றி அவரைப் போன்று மகிமையின் சரீரமாக மாற்று கிறவர் ஜீவிக்கிறார். வியாதியிலும் சுகத் திலும் ஜீவனிலும் சாவிலும் அவரை சார்ந்து கொள்ளுவோம். ஆண்டவராகிய இயேசுவாகிய தேவன் மகிமைப்படுவாராக.

கிறிஸ்து நமது முன்மாதிரியும் ஜீவனுமாயிருக்கிறார்

Christ is our example and our life

Adolph Saphir (1831-1891)

கிறிஸ்துவோடு மரித்தவர்களும் அவரோடு எழுந்தவர்களும் மட்டுமே அவரது வாழ்விலும் நடையிலும் அவரைப் பின்பற்ற முடியும். ஆனால் மற்றவர்களுக்கு அது கூடாது. எனினும் நாம் இரட்சகரின் உயிர்த்தெழுதலின் வல்லமை அவரது கிருபை ஆகியவற்றை அறிந்துகொண்டால் அவர் வாழ்வின் பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். அவரது ஆவியைப் பெற்றுக்கொண்டால் நாம் தேவனுடைய குமாரரைப் போல வாழவும் நடக்கவும் கூடும்.

1. முதலாவது கிறிஸ்துவின் வாழ்வின் நோக்கத்தை நினைவுகூருவோம் :

தன் சித்தத்தையல்ல, தன்னை அனுப்பின பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்றவே வந்தார் என்பதை அவர் மறக்கவில்லை. தமக்கு ஒரே ஒரு நோக்கம் தானிருந்தது என்பதை அவர் வலியுறுத்தினார். அது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவது மட்டுமே. எனவே தேவனுடைய ஒரு பணியாளனாக பிதாவின் பிரதிநிதியாக செயல்பட்டார். இப்போது நாம் இயேசுவால் அனுப்பப்படுகிறோம். நமது வார்த்தைகள் செயல்கள் யாவும் ஊழியத்தைக் குறித்தும் சேவையைக் குறித்தும் மட்டுமே இருக்க வேண்டும்.

2. இயேசு தாழ்மையோடு வந்தார். பெத்லகேமின் மாட்டுத்தொழுவம், நாசரேத்தின் எளிய வீடு, சிலுவை மரணம், கள்வர்களில் ஒருவராகத் தீர்க்கப்பட்டது. இவைகளுக்கிடையில் நாம் காண்பது அவரது தாழ்மை, வறுமை, எளிமை என்பவைகளே. 'நரிகளுக்கு குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குத் தங்கள் குஞ்சுகளை வைக்கும் கூடும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை' லூக்.9:58.

நாம் அவரிடம் கற்றுக் கொள்வதென்ன? அவரை நாம் பின்பற்ற வேண்டாமா? உலகம் மதிக்கும் ஐசுவரியம், கனம் ஆகிய உலக காரியங்களை நம்ப வேண்டாம். நமது தாக்கமும் வலிமையும் ஆவிக்குரியவை. சபை அடிமையின் அங்கியைத் தரிக்க வேண்டும். **தான் ஒரு வேலையாள் அல்லது பரதேசி அல்லது பிரயாணி என்று எண்ண வேண்டும்.** சபை ஐசுவரியமும் பலமுமடையும்போது உலகம் அதனை மதிக்கும். அது வலுவடையும்போது உப்பின் சாரம் அற்றுப்போகும். ஆவிக்குரிய நாட்டம் குன்றி உலக ஆவி நுழைவதால் சிலுவையின் இரகசியம் மங்கி மறைந்து போகும். பாடனுபவித்த ஏழ்மையான சிமிர்னா சபை அநேகரை ஐசுவரியவான்களாக்கியது. சபையின் மகிமை வெளியரங்கமானதல்ல. இராஜகுமாரத்தியாகிய கிறிஸ்துவின் மணவாட்டி உள்ளான மகிமை நிறைந்தவள்.

இயேசு தேவகுமாரன், அவர் பரத்திலிருந்து வந்தவர். அவர் ஏழையாக வந்தாலும் அனைத்தும் அவருடையவைகள். அவர் தாழ்மையுடன் வந்தார். ஆயினும் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தது. ஏனெனில் அவர் பிதாவின் ஒரே பேறான குமாரன். பிதா எப்போதும் அவரோடிருந்து அவருக்குச் செவி கொடுத்தார். எனவே சபை அழியாத வித்தினால் தேவனால் பிறந்தது. சபையின் வாழ்வு தலையாகிய உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வாழ்வு. அதோடு நம்மில் வாழும் ஆவியானவரின் வாழ்வு. கிறிஸ்துவைப் போல வாழ்வதால் உலகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். அதற்கு கிறிஸ்துவின் மரணம் ஏதுவாயிருக்கிறது. அதன் மூலம் உலகத்தின் கேடுபாடுகளுக்கு நாம் விலகி வாழலாம். சபை ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அறிவிக்கிறது. அது சபையின் ஜீவன் நம்பிக்கை ஆகியவற்றிற்கு ஆதாரம். எனவே மாம்சத்திற்குரிய நியாயத்தீர்ப்பு முதல் ஆதாமின் வித்தின் உதவியற்ற நிலை, புதிய பரம வாழ்வு ஆகியவை, பிதாவினுடைய ஒரே குமாரனாகிய கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலம் நிரூபிக்கப்படுகின்றன.

3. இந்த எளிமையிலும், வல்லமையிலும் சபை உலகம் முழுவதும் செல்ல வேண்டியதாயிருக்கிறது :

அன்பு, மனதுருக்கம் ஆகிய வற்றோடு வெறுமையும் மாயையுமான உலகில் சுவிசேஷ சாரம் அறிவிக்கப்பட வேண்டும். மரணமும் துக்கமும் நிறைந்த சூழலில் நித்திய ஜீவனும் ஆறுதலும் கூறப்பட வேண்டும். பாரம் சுமக்கும் மக்களுக்கு சமாதானமும், நொந்துபோன இருதயங்களுக்கு மன்னிப்பு, ஆரோக்கியம் ஆகியவையும் காயப்பட்ட நொறுங்கிய உள்ளங்களுக்கு மகிழ்ச்சியும் அறிவிக்கப்பட வேண்டும். சபை அனைவரையும் நேசித்து, அவர்களுக்காக மன்றாடும்பொழுது கிறிஸ்துவை போல விசேஷித்த உருக்கம் உலகிலுள்ள சகோதரர் மீது ஏற்படுகிறது. அவர்கள் மந்தையில் சேர்க்கப்படுவார்கள். கொடுக்கப்பட்ட சீடர்களுக்காக சபை கண்ணும் கருத்துமாக செயல்பட வேண்டும். ஏனெனில் அனுபவமற்றவர்களும் பெலவீனமானவர்களும் சோதிக்கப்பட்டவர்களும் தனிமைப்படுத்தப்பட்டவர்களும் இருக்கலாம். அவர்களைக் கட்டி எழுப்பி மகிழ்வித்து நித்திய ஜீவனுக்கு பங்காளிகளாக்க வேண்டும்.

சபை கிறிஸ்துவை போல பரத்திலிருந்து அனுப்பப்பட்டது. அதன் நோக்கம் ஒன்றே. அது தாழ்மையோடும் தெய்வீக பலத்தோடும் அன்பினால் ஊழியம் செய்வது. "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" யோவா.14:9. அது போலவே சபையை பார்க்கிறவர்கள் கிறிஸ்துவை பார்க்க வேண்டும்.

சபை ஐசுவரியமும் பலமுமடையும்போது உலகம் அதனை மதிக்கும். அது வலுவடையும் போது உப்பின் சாரம் அற்றுப்போகும்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

1. சுமார் 5 வருடங்களுக்கு முன்னால் 2017-ம் ஆண்டு, **வருட சந்தா ரூ.100** என்று அச்சிடப்பட்டிருந்தபோதே அருமையான கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் **வருடத்திற்கு ஒரு முறை** இவ்வாறு எழுதி அனுப்பினார்கள்:

- **சந்தாவும் காணிக்கையுமாக ரூபாய் 500 அனுப்புகிறேன்.**
- **சந்தாவும் காணிக்கையுமாக ரூபாய் 1000 அனுப்புகிறேன்.**
- **ரூபாய் 2000 அனுப்புகிறேன், சந்தா போக பாக்கியை ஊழியத்திற்கு பயன்படுத்துங்கள்.**

2. 1991-ம் ஆண்டு அடியேன் தூதன் உதவி ஆசிரியராக நியமிக்கப்படு முன்னரே, மாதந்தோறும் ரூபாய் 1100 அனுப்பிக் கொண்டிருந்த கேரளாவை சார்ந்த ஒரு தேவனுடைய பிள்ளை, 2018-ம் ஆண்டு மரணமடையும் வரைக்கும் மாதந்தோறும் அனுப்பிக் கொண்டிருந்தார். இதுபோல் இன்று வரை மாதந்தோறும் காணிக்கை அனுப்புகிற, **வேலையில் இருக்கிறவர்களும், வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுமே காரணம்.**

II அக்டோபர் 2019 பக்கம் 2

நாங்கள் இதுவரை யாருக்கும் பத்திரிகை அனுப்புவதை நிறுத்தவில்லை. பத்திரிகை வரத்தவறினால் உடனே எங்களுக்கு தெரிவியுங்கள். கொரியர் மூலம் அனுப்புவோம்.

உதாரணமாக, **மார்ச் மாத பத்திரிகை** கிடைக்கவில்லை என்று 4 பேர் போன் பண்ணினார்கள். இவர்களுக்கு திரும்பவும் தபால் வழியாக அனுப்பினோம்.

1. CN 02667
2. CP 00184
3. NC 01159
4. TN 02093

III அக்டோபர் 2019 பக்கம் 2

1. எல்லா ஊழியங்களைப்போல வருகையின் தூதன் ஊழியத்தையும் **தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.**
2. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி தாராளமாய் விசேஷ காணிக்கை அனுப்புகிறீர்கள். நன்றி.
3. வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் காணிக்கை அனுப்புகிற தேவனுடைய பிள்ளைகள், குறைந்த பட்சம் ரூபாய் 500/-அனுப்பும் படி அதிக அன்பாய் கேட்கிறேன்.
4. நேரிலோ, M.O., D.D., M.T., Cheque மூலமாகவோ ரூபாய் 100 சந்தா என்று எழுதியோ, எழுதாமலோ தயவுசெய்து அனுப்பாதீர்கள்.

இவ்வளவு தெளிவாக எழுதியும் வாசகரில் அநேகர் இன்றுவரை வழக்கம் போல வருடத்திற்கு ஒருமுறை ரூபாய் 100 அனுப்பு கிறீர்கள்

எனவே, ஆண்டவருக்குச் சித்தமானால் 2022-ம் வருடம் முதல், முற்றிலும் **புதிய முகவரி பட்டியல்** தயார் பண்ணி, அதன்படி பத்திரிகை அனுப்பப்படும் என்று அறிவிக்கிறேன். மாதந்தோறும் பத்திரிகையின் 2-ம் பக்கம் அச்சிடப்படும் அறிவிப்பை அப்படியே கீழே அச்சிடுகிறேன்.

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

1. தினந்தோறும் ஜெபியுங்கள், மாதந்தோறும் தாங்குங்கள்.
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.
3. அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திர முடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த **உதாரத்துவமாய்** கொடுத்தார்கள் 2 கொரி.8:2.

"உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" 2 கொரி.9:7.

கடிதம் - 2

M. Jebarsan

என் சித்தப்பா வீட்டில் தூதனை வாசிப்பேன். என் தாத்தா காலத்தில் இருந்தே வாங்குகிறார்கள். என் முகவரிக்கும் தயவுசெய்து அனுப்பவும், நன்றி.

வருகையின் தூதன் அச்சிடப்படுவதின் நோக்கம்

1. இயேசுவின் கடைசி கட்டளை மத்.28:20
2. இயேசுவின் முதல் பிரசங்கம் மாற்கு 1:15.
3. இயேசு உயிர்த்தெழுந்தபின் கட்டளை லூக்.24:47
4. ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் யோவான் 3:5.

*****

அருமை தம்பி, இடவசதிக்காக கடிதத்தைச் சுருக்கி உள்ளேன். உங்கள் கடிதத்திற்கு நன்றி. பத்திரிகை அனுப்ப ஒழுங்கு செய்துள்ளேன்.

உங்களைப் போல அருமை சகோதரி ஒருவரும் வாட்ஸ்அப் மூலமாக பதில் அனுப்பியிருந்தார்கள் :

"வருகையை குறித்தும், அதற்காக ஆயத்தப்படுத்தும் வேலையையும் வருகையின் தூதன் பத்திரிகை செய்கிறது என்பது என்னுடைய புரிதல்." (CB 00887)

ஆனால், அருமை ஆண்டவர் இயேசுகிறிஸ்து வருகையின் தூதன் அச்சிடப்படும் நோக்கத்தை மிகத் தெளிவாக, பளிச் சென்று கூறியுள்ளார். சுவிசேஷங்களில் தேடி பார்த்து பதில் எழுதி அழகான தங்க ஓரமுள்ள கொரியன் பிரின்ட் வேதாகமத்தை பரிசாக பெற்றிட இரண்டு பேருக்கும் எனது வாழ்த்துக்கள்!

கடிதம் - 3

24.03.2021

வருகையின் தூதன் ஆசிரியருக்கு

இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

தங்கள் தூதன் எங்களுக்கு மாதந்தோறும் ஆவியை தட்டி எழுப்புகிறது. ஏசாயா 52:1-படி எழும்பு எழும்பு சீயோனே உன் வல்லமையைத் தரித்துக் கொள். பரிசுத்த நகரமாகிய எருசலேமே உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக் கொள். தூசியை உதறி விட்டு எழுந்திரு என தட்டி எழுப்பக் கூடியது. அருமையான உணவு அளித்த உங்களுக்கு இது வரை நான் பணம் அனுப்பியதே இல்லை. மன்னித்துக் கொள்ளுங்கள் (ஜெபிப்பேன்). இன்று ரூபாய் 100 அனுப்புகிறேன்.

ஜெபக்குறிப்பு :

மகள் (31) T.B-யினால் பாதிக்கப்பட்டு 4 மாதமாக வீட்டில் இருக்கிறாள். அவள் கணவனோடு சேர்ந்து புதுப்பெலத்தோடு வாழவும், மகளுக்கு சரீர சுகம், குடும்பத்தை ஞானமாய் நடத்த இயேசு தம் வல்லமையை விளங்கப் பண்ணவும், பேரனுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

*****

கிறிஸ்துவுக்குள் அருமை சகோதரிக்கு, வருகையின் தூதன் மாதந்தோறும் அச்சிடப்பட்டு உங்களுக்கு அனுப்பப்பட 7 விதமான தேவைகள் உண்டு. சுருக்கமாக கீழே அச்சிடுகிறேன் :

1. பத்திரிகைக்கானகாகிதம் (Paper)
2. அச்சிடுவதற்கான செலவு (Printing)
3. அனுப்புவதற்கான மடிப்பு செலவு (Folding charges)
4. தபால் தலைகள், தபால் சேவை கட்டணம் (stamps, postal service charges)
5. மின் கட்டணம், தண்ணீர் கட்டணம், கார்ப்பரேஷன் வரிகள்
6. ஸ்டேஷனரி, பெட்ரோல், ரீசார்ஜ் etc.
7. ஊதியங்கள், அலவன்ஸ் (Salaries & Allowances)

சுக வாழ்வு

தேவ கிருபையால் 2020 தேவனோடு சஞ்சரிக்கும் ஆண்டு walking with the LORD, 2021 ஆண்டவரோடு நேரம் செலவிடும் ஆண்டு spending time with the LORD என்று அறிவித்திருந்தேன். உங்களில் எத்தனை பேர் ஆண்டவரோடு நேரம் செலவிடுகிறீர்களோ நான் அறியேன். ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இவ்வாறு மார்த்தாளைப் பார்த்துக் கூறி, மரியாளை மிகவும் மெச்சி பேசுகிறார் :

அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து : ஆண்டவரே, நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள்.

இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக : மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டு கலங்குகிறாய்.

தேவையானது ஒன்றே, மரியாள் தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார் லூக்கா 10:39-42.

இதுபோல இந்த வருடத்திற்கான வாக்குத்தத்தை ஜனவரி மாத பத்திரிகையிலும், சிலருக்கு அனுப்பின நன்றி கடிதத்திலும் அச்சிட்டிருந்தேன்.

"அப்பொழுது விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும், கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்" ஏசாயா 58:9.

"சுகவாழ்வு" வேண்டும் என்று வாஞ்சிக்கிறோம். அதற்கான வழியை முந்தின வசனத்தின் இறுதியில் **"உகந்த உபவாசம்"** என்று தேவன் எழுதி வைத்திருக்கிறதை கவனிக்க தவறுகிறோம்.

தேவன் விரும்பாத அல்லது வெறுக்கிற உபவாசத்தைக் குறித்து எழுதிய பின், தேவனுக்கு உகந்த உபவாசத்தைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக தேவன் தெளிவாக எழுதி வைத்திருக்கிறார். அது என்ன? உங்களுக்கு **"சுகவாழ்வு"** தேவையா? தேவனுக்கு உகந்த உபவாசம் செய்யுங்கள், அல்லேலூயா.

இன்று **"உபவாசம்"** அல்லது **"உபவாச ஜெபம்"** என்றால் வெறுக்கிறோம். அது நமக்கு கசப்பாக இருக்கிறது. வீட்டிலிருந்து தனியாக உபவாசித்து ஜெபிக்க இயலாவிட்டால் ஆலயத்தில் நடக்கும் உபவாச ஜெபங்களில் கலந்து கொள்ளலாமல்லவா?

"சுகவாழ்வு" பற்றி ஆண்டவருக்குச் சித்தமானால் 7 மாதங்கள் தொடர்ந்து எழுதுவேன். வரப்போகிற இந்த 7 மாத செய்திகளையும் நீங்கள் படித்து முடிக்கும்போது, நிச்சயமாகவே தேவன் உங்கள் வாழ்க்கையில் மிகப் பெரிய மாறுதலை கட்டளையிடுவார் என்று கர்த்தருக்குள் அடியேன் விசுவாசிக்கிறேன். ஆமென்.

முகவுரையாக, **'உபவாசம்'** பற்றி 7 குறிப்புகளை இம்மாதம் உங்கள் சிந்தனைக்காக எழுதுகிறேன்.

உபவாசம்

I. கர்த்தரைக் கோபப்படுத்துவதற்கு நீங்கள் அவருடைய சமூகத்தில் பொல்லாப்புச் செய்து நடப்பித்த உங்களுடைய சகல பாவங்கள் நிமித்தமும், நான் கர்த்தருக்கு முன்பாக முன்போல இரவும் பகலும் நாற்பதுநாள் விழுந்து கிடந்தேன்; நான் அப்பம் புசிக்கவுமில்லை, தண்ணீர் குடிக்கவுமில்லை உபாகமம் 9:18.

மோசே இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசிக்க காரணம் என்ன?

மோசே மேகத்தின் நடுவிலே பிரவேசித்து, மலையின்மேல் ஏறி, இரவும் பகலும் நாற்பது நாள் மலையில் இருந்தான் யாத்.24:18. யாத்திராகமம் 25-ம் அதிகாரம் முதல் 31-ம் அதிகாரம் வரை மோசே தேவனோடு மலையில் இருப்பதை வாசிக்கிறோம். சீனாய் மலையில் அவர் மோசேயோடே பேசி முடிந்த பின், தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார் யாத்.31:18.

32-ம் அதிகாரம் "மோசே மலையிலிருந்து இறங்கி வரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது," என்று ஆரம்பிக்கிறது. "அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்து கொண்டு அதற்குப் பலியிட்டு : இஸ்ரவேலரே, உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள்" யாத்.32:8.

கர்த்தர் மோசேயை நோக்கி : இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்கா கழுத்துள்ள ஜனங்கள்.

ஆகையால் என் கோபம் இவர்கள் மேல் மூளவும், நான் இவர்களை அழித்து போடவும் நீ என்னை விட்டு

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

விடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார் யாத்.32:9,10.

மறுநாளில் மோசே ஜனங்களை நோக்கி : நீங்கள் மகா பெரிய பாவஞ் செய்தீர்கள்; உங்களுக்காகப் பாவநிவர்த்தி செய்யக் கூடுமோ என்று அறிய இப்பொழுது நான் கர்த்தரிடத்திற்கு ஏறிப்போகிறேன் என்றான்.

அப்படியே மோசே கர்த்தரிடத்திற்குத் திரும்பிப் போய் : ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள்.

ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான் யாத்.32:30-32.

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, ஜனங்கள் பாவம் செய்யும்போது உபவாசித்த மோசேயை போல உபவாசித்து ஜெபிக்கிறீர்களா? இதைக் குறித்து சங்கீதக்காரன் இவ்வாறு பாடியுள்ளான் :

அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியையுண்டாக்கி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள். தங்கள் மகிமையைப் புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள்.

எகிப்திலே பெரிய கிரியைகளையும், காமின் தேசத்திலே அதிசயங்களையும், சிவந்த சமுத்திரத்தண்டையிலே பயங்கரமானவைகளையும் செய்தவராகிய,

தங்கள் இரட்சகரான தேவனை மறந்தார்கள்

ஆகையால், அவர்களை நாசம் பண்ணுவேன் என்றார்; அப்பொழுது அவரால் தெரிந்து தெளிந்தெடுக்கப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு, அவருக்கு முன்பாகத் திறப்பிலே நின்றான் சங்.106:19-23.

II. இஸ்ரவேல் புத்திரராகிய சகல ஜனங்களும் உபவாசித்தார்கள் நியா.20:26 காரணம் என்ன?

இஸ்ரவேலில் இருபத்தீராயிரம் பேரை அன்றைய தினம் தரையிலே விழும்படி சங்கரித்தார்கள் நியா.20:21.

..... பின்னும் இஸ்ரவேல் புத்திரரில் பட்டயம் உருவுகிற பதினெண்ணாயிரம் பேரைத் தரையிலே விழும்படி சங்கரித்தார்கள் நியாயா.20:25.

இஸ்ரவேலில் 22,000 + 18,000 பேர் சங்கரிக்கப்பட்டதினால் உபவாசித்தார்கள். எப்படி உபவாசித்தார்கள்? இது மிகவும் முக்கியம்.

1. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரராகிய சகல ஜனங்களும் புறப்பட்டு, ... உபவாசித்தார்கள்.

உபவாச ஜெபங்களுக்கு பொதுவாக 10 சதவீத விசுவாசிகளே வருகிறார்கள்.

2. தேவனுடைய வீட்டிற்குப் போய் .... உபவாசித்தார்கள்.

தேவனுடைய வீடு House of God என்றழைக்கப்படுகிறது. இந்நாட்களில் இது தேவனுடைய சபையை குறிக்கிறது.

3. அங்கே கர்த்தருடைய சந்நிதியில் அழுதார்கள்.

இது அவர்களுடைய வேதனையை காண்பிக்கிறது. இந்த அனுபவத்தை நெகேமியாவிடம் பார்க்கிறோம். "..... நான் உட்கார்ந்து அழுது" நெகேமியா 1:4. பின்னும் எஸ்தர் ராஜ சமூகத்தில் பேசி, அவன் பாதங்களில் விழுந்து அழுதாள் எஸ்தர் 8:3.

"பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன் என்று, எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள்" ஆகார் ஆதி.21:16.

அழியும் ஆத்துமாக்களுக்காக சத்தமிட்டு அழுகிறீர்களா?

4. தரித்திருந்து ..... உபவாசித்தார்கள்.

5. சாயங்காலமட்டும் உபவாசித்தார்கள்.

6. கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகன பலிகளையும் சமாதான பலிகளையும் இட்டு .... உபவாசித்தார்கள்.

7. கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள்.

III. அதற்கு அவர்கள் : சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்த தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவிக்கிறார்கள்; எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது மாய்க் கிடக்கிறது என்றார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட போது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, **உபவாசித்து**, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி : ..... பிரார்த்தித்தேன் நெகேமியா 1:3.

IV. அப்பொழுது எஸ்தர் மொர்தெகாய்க்கு மறுபடியும் சொல்லச் சொன்னது :

நீர் போய், சூசானில் இருக்கிற யூதரை யெல்லாம் கூடிவரச்செய்து, மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக **உபவாசம்** பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் **உபவாசம்** பண்ணுவோம்; இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; **நான் செத்தாலும் சாகிறேன்** என்று சொல்லச் சொன்னாள் எஸ்தர் 4:15,16.

V. தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவேறித்தீர எழுவது வருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்க தரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையை புஸ்தகங்களால் அறிந்து கொண்டேன்.

நான் **உபவாசம்** பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி ..... தானியேல் 9:2,3.

VI. ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங்கொண்டு, தமது ஜனத்தைக் கடாட்சிப்பார் யோவேல் 2:12,18.

VII. யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒருநாள் பிரயாணம் பண்ணி : இன்னும் நாற்பதுநாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப் பட்டுப்போம் என்று கூறினான்.

அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ் செய்யும்படிக் கூறினார்கள்; பெரியோர்முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள் யோனா. 3:4,5.

கடைசியாக தாவீது தன்னுடைய பிள்ளைக்காக உபவாசித்ததை எழுதி முடிக்கிறேன்.

"அப்பொழுது தாவீது அந்தப் பிள்ளைக்காகத் தேவனிடத்தில் பிராரித்தனை பண்ணி, உபவாசித்து, உள்ளே போய், இரா முழுதும் தரையிலே கிடந்தான். 2 சாமுவேல் 22:16.

நமக்காக, நம்முடைய பிள்ளைகளுக்காக, நம்முடைய குடும்பங்களுக்காக, சபைக்காக, சமுதாயத்திற்காக, தேசத்திற்காக உபவாசிக்க உங்களுக்கு தேவன் தாமே கிருபை தருவாராக.

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008
சமயம் : 10-01; 02-06

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

ஆவிக்குரிய நாட்டம் குன்றி உலக ஆவி நுழைவதால் சிலுவையின் இரகசியம் மங்கி மறைந்து போகும்.

அவர் அன்பிலும் பரிபூரணர். அவர் மனிதரிடம் காட்டிய அன்பு பார பட்சமற்றது. நல்லோரையும் பொல்லாதோரையும் அவர் ஒன்றுபோல நேசித்தார்.

மரணமே உன் வாதைகள் எங்கே? பாதாளமே உன் சங்காரம் எங்கே? என்று சவால் விட்டவர் உயிரோடிருக்கிறார்.

நமது தீய உடலை மாற்றி அவரைப் போன்று மகிமையின் சரீரமாக மாற்றுகிறவர் ஜீவிக்கிறார்.

நீங்கள் எத்தனையோ காரியங்களை அறிவது என் விருப்பமாயிருந்தாலும் அவற்றில் விரும்பப்படத்தக்கது இயேசு ஒருவரே.

பரித்தவான்களின் வாழ்க்கையைக் குறித்து அனுதினமும் கற்றுக் கொள்வது தேவனுடைய மந்தையை மேய்க்கிறவர்களுக்கு மிகவும் அவசியம்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason